

தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் அரசியல் மாமேதை முரசொலி மாறன் அவர்களின் 92வது பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட கழக அலுவலகம், கலைஞர் அறிவாலயத்தில் அலங்கரிக்கப்பட்ட அவருடைய திருவுருவப்படத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. இந்நிகழ்வில் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எஸ்.எஸ். பழநிமாணிக்கம் ச.முரசொலி எம்.பி, மாநகரக் கழகச் செயலாளர் சண்.இராமநாதன், தலைமை செயற்குழு உறுப்பினர் து.செல்வம், மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் அஞ்சுகம் பூபதி மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் பங்கேற்றனர்.



ஈரோடு மத்திய மாவட்டம், பெருந்துறை அண்ணா சிலை அருகில் முத்தமிழறிஞர், தமிழினத் தலைவர், கலைஞர் அவர்களின் 7வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு ஈரோடு மத்திய மாவட்ட கழகம் சார்பில் மாவட்ட கழக பொறுப்பாளரும், முன்னாள் அமைச்சருமான தோப்பு என்.டி. வெங்கடாச்சலம் தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் பெருந்துறை ஒன்றிய கழக செயலாளர்கள் பெரியசாமி, டி.பி.கனகராஜ், அம்மாபேட்டை ஒன்றிய செயலாளர்கள் ஈஸ்வரன், அசோக்குமார், பேரூர் செயலாளர்கள் அகரம் திருமூர்த்தி, ஓசிவி.ராஜேந்திரன், பழனிச்சாமி, பேரூராட்சி தலைவர் ஜி.கே. செல்வன்உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# மாணவிகள் உயர்ந்த நிலைக்கு வருவதற்கு விடாமுயற்சி தேவை!

## செஞ்சியில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேச்சு!


செஞ்சி, ஆக. 18-

மாணவிகள் உயர்ந்த நிலைக்கு வருவதற்கு விடா முயற்சி தேவை என செஞ்சி அரசு மகளிர் மேல் நிலைப் பள்ளியில் முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தி சிறப்புரையாற்றினார்.

நாட்டின்79வது சுதந்திர தின நாள் திருவிழா இன்று நாடு முழுவதும் கோலாலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில்நாட்டின்79 வது சுதந்திர தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது இதை முன்னிட்டு செஞ்சி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் தேசியக் கொடி ஏற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது.

செஞ்சிபேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் முன்னிலை வகித்தார். பள்ளி தலைமை ஆசிரியர் செந்தில் குமார் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு தேசிய கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார் .தொடர்ந்து சுதந்திர தினவிழாவைமுன்னிட்டு சிறப்புரையாற்றி பள்ளி ஆசிரியர்களுக்கு சால்வை அணிவித்து சுதந்திர தின வாழ்த்துக்களை தெரிவித்தார்.



நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசுகையில்:

இன்று நாடு முழுவதும் 79 ஆவது சுதந்திர தின விழா சீரும் சிறப்புமாக கொண்டாடப்பட்டு வருகிறது நாடு முழுவதும் சுதந்திர தினத்தில் முதலமைச்சருக்கு தேசிய கொடியினை ஏற்றி வைக்கும் உரிமை பெற்றுக் கொடுத்தவர் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் ஆவார். அவர் வழியில் ஆட்சி செய்யும் தமிழ் நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்கல்வியும், சுகாதாரமும் தனது இரண்டு கண்களாக எண்ணி கல்வித் துறைக்கும் மருத்துவத்திற்கும் எண்ணற்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் இல்லம் தேடி கல்வி, புதுமைப் பெண் திட்டம்,தமிழ் புதல்வன், நான் முதல்வன், முதலமைச்சரின் காலை சிற்றுண்டி திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களை அறிவித்து உலகமே திரும்பிப் பார்க்கும் வகையில்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.இன்றைக்கு தனியார் பள்ளிகளை மிஞ்சும் வகையில் அரசு பள்ளி கட்டிடங்களைமுதலமைச்சர் கட்டுவதற்கு உத்தரவிட்டுள்ளார் அந்த வகையில் இன்று பல்வேறு பள்ளிகளில் அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகிறது.

நம்மிடத்தில் இருந்து திருட முடியாத ஒரு சொத்து கல்வி.இந்த கல்வியை மாணவிகள் நல்ல முறையில் படித்து தங்களின் தாய் தந்தைக்கு நல்ல பெயரை பெற்று தர வேண்டும்.மாணவிகள் உயர்ந்த நிலைக்கு வருவதற்கு விடா முயற்சிகட்டாயம் தேவை எனமுன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ உறுதிபட தெரிவித்தார்.

நிகழ்ச்சியில்ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், துரை, பேரூராட்சி மன்றதுணைத் தலைவர் ராஜலட்சுமி செயல்மணி, பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர்கள் மாணிக்கம், திலகவதி,மன்ற உறுப்பினர் கள்அஞ்சலை நெடுஞ்செழியன், லட்சுமி வெங்கடேசன், கார்த்திக்,சீனிவாசன், ஜான்பாஷா, சங்கர், புவனேஸ்வரி அண்ணாதுரை, மகாலட்சுமி கமல நாதன், சிவகுமார்,அகல்யா சுமித்ரா சங்கர்,சங்கீதா சுந்தர மூர்த்தி, பொன்னம்பலம், நூர்ஜகான் ஜாபர், பள்ளி மேலாண்மை குழு தலைவர் பள்ளி இருபால் ஆசிரியர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.பள்ளி உதவி தலைமை ஆசிரியர் தேவதாஸ் அனைவருக்கும் நன்றி கூறினார்.

செஞ்சி பேரூராட்சிஅலுவலகத்தில் சுதந்திர தின விழா:

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சியில் நாட்டின்79வது சுதந்திர தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது இதை முன்னிட்டு பேரூராட்சி அலுவலகத்தில் தேசியக் கொடி ஏற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் முன்னிலை வகித்தார்.பேரூராட்சி செயல் அலுவலர் கலையரசி அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் மஸ்தான் கலந்துகொண்டு தேசிய கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சியில் பேரூராட்சி மன்றதுணைத் தலைவர் ராஜலட்சுமி செயல்மணி, மன்ற உறுப்பினர்கள்.சந்திரா அச்சுதன்,அஞ்சலை நெடுஞ்செழியன், லட்சுமி வெங்கடேசன், கார்த்திக், சீனிவாசன்,ஜான்பாஷா, சங்கர், எம்.பி.ஆர்.மோகன், புவனேஸ்வரி அண்ணாதுரை, மகாலட்சுமி கமலநாதன், சிவகுமார், அகல்யா வேலு, சுமித்ரா சங்கர், சங்கீதா சுந்தரமூர்த்தி, பொன்னம்பலம், நூர்ஜகான் ஜாபர், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் செந்தில்குமார்,செந்தில் குமரன், முன்னால் கவுன்சிலர்கள், மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் பேரூராட்சி பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர்

# தொல்.திருமாவளவன் சிற்றன்னை செல்லம்மாள் மறைவு!

## சொந்த ஊரான அரியலூர் அங்கனூரில் இன்று இறுதி சடங்குகள்!



பெரம்பலூர், ஆக.18-

பெரம்பலூர் தனலெட்சுமி சீனிவாசன் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கடந்த பத்து நாட்களுக்கும் மேலாக சிகிச்சை பெற்று வந்த விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர்- சிதம்பரம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தொல்.திருமாவளவன் அவர்களின் சிற்றன்னை செல்லம்மாள் (78) என்பவர், 17.08.2025, ஞாயிற்றுக்கிழமை, காலை சுமார் 6.50 மணியளவில் மருத்துவமனையில் காலமானார். இவரது உடல் சொந்த ஊரான அரியலூர் மாவட்டம் அங்கனூர் கிராமத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கு அரசியல் கட்சி பிரமுகர்கள், பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படுகிறது. இன்று 18.08.2025, திங்கட்கிழமை மதியம் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

தனது சிற்றன்னை மறைவையொட்டி தொல்.திருமாவளவன் தனது முகநூல் பக்கத்தில் தெரிவித்துள்ளதாவது:-

எனது சிற்றன்னை செல்லம்மாள் (78)அவர்கள் சற்று முன் இயற்கை எய்தினார்.

கடந்த ஆக 07 அன்று மூளையில் இரத்தக் கசிவு ஏற்பட்டு சுயநினைவு இழந்தநிலையில் பெரம்பலூரில் உள்ள தனலட்சுமிசீனிவாசன் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டார். மிகுந்த கவனத்தோடு மருத்துவர்கள் தீவிர கண்காணிப்புடன் சிகிச்சை அளித்தனர். எனினும், பலனின்றி தற்போது காலமானார்என்பது பெருந் துயரமளிக்கிறது.

பள்ளிப் பருவத்தில் எனக்கு ஆடை உடுத்தி, தலையில் எண்ணெய்த் தடவி இரட்டை சடைபின்னிவிட்டுப் பள்ளிக்கு அழைத்துச் சென்ற தாய்! தந்தை என்னைக் கண்டிக்கும் போதெல்லாம் எனக்காக வாதாடிய தாய்! வீட்டில் மூத்த மகன் என்பதால் 'பெரியதம்பி, பெரியதம்பி' என்று என்னைச் செல்லமாக அழைத்த தாய்! நான் பட்டவகுப்பை முடித்த காலத்திலிருந்து, 'படித்தது போதும் கல்யாணம் பண்ணு பா' என அறிவுறுத்திய தாய்! பத்தாண்டுகளுக்கு முன்னரே பக்கவாதத்தால் உடல் நலிவுற்று நினைவு தடுமாறி வீட்டிலேயே முடங்கிய நிலையிலும் எப்போதாவது நான் ஊருக்குச் செல்லும்போது, என் குரல் கேட்டதும் 'தம்பீ தம்பீ' என்று ஓடிவந்து என் கைகளை இறுகப் பற்றிக் கொண்டு அன்பைப் பொழிந்த தாய்! இன்று எம்மோடு இல்லை என்பது வாழ்வே வெறுமையாய் உள்ளது. துக்கத்தால் மனம் கனக்கிறது.

அப்பா(2010), அக்கா, (2020), சின்னம்மா (2025) என அடுத்தடுத்து இழப்புகளை எதிர்கொள்ளும் அவலம். துயரங்களைத் தாங்கும் நிலை. அம்மாவுக்கு எனது வீரவணக்கம்!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### இந்திய திருநாட்டின் 79வது சுதந்திர தினவிழாவை முன்னிட்டு

# திருவொற்றியூர் ஜெயகோபால் கரோடியா பள்ளியில் தேசியக் கொடியேற்றி - இனிப்பு!

## கழக மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, ஆக. 18-

இந்திய திருநாட்டின் 79 வது சுதந்திர தின விழா நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஜெய்கோபால் கரோடியா அரசு மேல்நிலைப் பள்ளியில் மாநில மீனவர் அணி துணைத்தலைவர், திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் தேசிய கொடியை ஏற்றி மாவவர்களுக்கு இனிப்புகள் வழங்கினார்.

இந்தியா திருநாட்டின் 79 ஆவது சுதந்திர தின விழா திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஜெய்கோபால் கரோடியா அரசு மேல்நிலைப் பள்ளியில் உதவி தலைமை ஆசிரியர் திருமதி.சாந்தி வரவேற்பில், தலைமை ஆசிரியர் திருமதி.வெற்றிச்செல்வி, உதவி தலைமை ஆசிரியர் திரு.பாலாஜி ஆகியோர் முன்னிலையில், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் வி. ராமநாதன், ஆலோசகர் கே.பி.சொக்கலிங்கம் ஆகியோர் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

சிறப்பு அழைப்பாளராக மாநில மீனவரணி துணை தலைவர், திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் கலந்து கொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்து, மாணவ மாணவிகளின் அணி வகுப்பு மரியாதையை ஏற்றார்.

அதனை தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் சிலம்பாட்டம் குத்துச்சண்டை போட்டிகள் நடைபெற்றது, நடைபெற்று முடிந்த 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு பொது தேர்வில் பள்ளி அளவில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவர்களுக்கு, பள்ளிகளுக்கு இடையான விளையாட்டு போட்டிகளில் வட்டார அளவில் நடைபெற்ற கைப்பந்து போட்டி, பெண்களுக்கான கொக்கோ போட்டிகளின் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் ஊக்க தொகை வழங்கினார்.

நிகழ்ச்சியில் கழக பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன் 14வது (அ) வட்ட கழக செயலாளர் ஏகா.கார்த்திகேயன், மாவட்ட பிரதிநிதிகள் கே.கார்த்திகேயன் ஜே.பி. சந்தானகிருஷ்ணன், மாவட்ட அயலக அணி தலைவர் எஸ்.டி.சங்கர், கழகப் பேச்சாளர் எழும்பூர் கோபி, டெய்லர் மணி, மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் கே. தேசிங்கு, துணை அமைப்பாளர்கள் தமிழ்ச்செல்வன், எஸ்.செல்வம், டி. மகேந்திரன் ஆர்.குமரன் எம்.எல்.வேலன், ரமேஷ், 5வது வட்ட நிர்வாகிகள் வே.கோபால், கே.ரமேஷ், விஜயலட்சுமி, எஸ்.எல்லப்பன், முத்துக்கருப்பன், டி.எஸ்.பாபு, கோ.கஜேந்திரன் என்.தன்ராஜ், பீட்டர், ஆர்.சிங்காரவேலு பி.ரவி, சாவித்திரி, கோவிந்தராஜ், எம்.ஜோதி, எஸ். சுப்பிரமணி, டி.எம்.எல்லன், ஜே.விஜயா, மாவட்ட சிறுபான்மையினர் துணை அமைப்பாளர் எம்.அமிர்தராஜ்,

கே.எஸ்.ஆனந்தன், ஜே.கருணாநிதி, தேவராஜ், குடியரசு, கிருஷ்ணன், ஜெ.ஆர்.டி.சேகர், சோழன், ராமராஜ், எம். டி.சி. லோகநாதன், சண்முகம், மகளிர் அணி புனிதா, ஹேமலதா, மஞ்சு, பத்மா, எஸ்.விஜயராகவன், தங்கவேல், இளங்கோவன், வினோத், பிரதாப், சிவா, மணி, சேகர், எல்லன், பிரேம், கொள்கை மணி, கஜா, இறுதியாக கலை ஆசிரியர் செந்தில் நன்றியுரை கூறினார்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! சரிதா மகேஷ்குமார் எம்.சி. தலைமையில்

# கொளத்தூர் தொகுதியில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி – மேயர் பிரியா ராஜன் வழங்குகின்றனர்!

சென்னை, ஆக. 18 -

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கொளத்தூர் தொகுதியில் ஆகஸ்ட் 7 - "போராளி ஓய்வதில்லை" மறக்க முடியுமா - 10, சுயமரியாதை ஒளிதந்த கலைஞர்! தொகை தந்து வழிதந்தார் தலைவர்! எனும் தலைப்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (18.08.2025 - திங்கட்கிழமை) மாலை 5 மணி அளவில், சென்னை, கார்த்திகேயன் சாலையில் உள்ள திருவள்ளுவர் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

தலைமை பொதுக்குழு உறுப்பினர், 6 வது மண்டலக் குழுத் தலைவர் சரிதா மகேஷ்குமார் எம்.சி. தலைமை வகிக்கிறார்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், தேவஜவகர், புனிதவதி எத்திராசன் எம்.சி, எஸ்.பன்னீர்செல்வம், வானவில் விஜய், எஸ்.தனசேகர், துரை கண்ணன், ஆர்.எஸ்.சித்திக், ம.அசோக் குமார், சுதா தீனதயாளன் எம்.சி, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கொளத்தூர் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள் எம்.தாவூத்பி, யோகபிரியா தனசேகர், பி.அமுதா பொன்னிவளவன், சி.ஸ்ரீதணி ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் ஆகியோர் கலந்து கொண்டு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கருணாநிதி வீராசாமி, கழக சட்டத்திட்ட திருத்தக் குழுச் செயலாளர் இரா. கிரிராஜன் எம்.பி, கழக துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, கழக பொறியாளர் அணி இணைச் செயலாளர் வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் தலைவர் ப.ரங்கநாதன், கொளத்தூர் தொகுதி தேர்தல் பார்வையாளர் இரா.விடுதலை, கே.எஸ்.ரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி எம்.சி, தமிழன் பிரசன்னா, சங்கரி நாராயணன், எஸ்.மணிமுடி, கவிஞர் நன்மாறன், எம்.விஜயகுமார், கே.எஸ்.எம்.நாதன், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, பரிதி இளம் சுருதி எம்.சி, ஆர்.வரதன், வே.உமாகாந்த் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், மண்டலக்குழு, நிலைக் குழு தலைவர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

68 வது வட்டக் கழகச் செயலாளர் கே.பி.ஆதவன் மணி நன்றி கூறுகிறார்.

## நாமக்கல் மேற்கு மாவட்டம்

## பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்!

### தலைமைக் கழக அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் நாமக்கல் மேற்கு மாவட்டத்தில், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட பி.பி.சாமிநாதன் அவர்கள் கபிலர்மலை தெற்கு ஒன்றியக் கழக பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதால், கழக சட்டதிட்ட விதிகளின்படி, 'ஒருவருக்கு ஒரு பொறுப்பு' என்ற அடிப்படையில், பி.பி.சாமிநாதன் அவர்கள், தான் வகித்து வந்த பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டதால்;

நாமக்கல் மேற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, ஆகஸ்ட் 20 (புதன்கிழமை) அன்று ரூ.25000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும். வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 16-08-2025.

துரைமுருகன்
பொதுச்செயலாளர்
தி.மு.க.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கோபியில் "அண்ணா அறிவகம்" (FIREWALL) அலுவலகம் மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் மாநில தகவல் தொழில் நுட்ப அணி செயலாளரும், தொழில்துறை அமைச்சருமான டி.ஆர்.பி ராஜா திறந்து வைத்து நிர்வாகிகளுடன் கலந்துரையாடினார். நிகழ்வில் ஏ.ஜி.வெங்கடாசலம், டாக்டர் எம். செந்தில்நாதன், கள்ளிப்பட்டி மணி, ஜி.வி.மணிமாறன், காயத்ரி சீனிவாசன், பி.கேசவன், சுரேஷ்குமார், எ.பெருமாள்சாமி, எஸ்.எஸ்.குருசாமி, கீதா நடராஜன், எஸ்.டி.புகழேந்தி, வெள்ளியங்கிரி, சக்தி, ஜானகிராமசாமி, புளியம்பட்டி, பி.ஏ.சிதம்பரம், சிறுவலூர் எஸ்.ஏ.முருகன், சீனிவாசன், மெடிக்கல் செந்தில்குமார், ஜம்பு (எ) சண்முகம், ஐட்டி விங் ஒருங்கிணைப்பாளர் ச.செந்தில்குமார் உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு. அருணா அவர்களை சந்தித்து., புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாநகராட்சி மற்றும் ஊராட்சி பகுதிகளில் நிலவி வரும் குடிநீர் பற்றாக்குறையை சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவும், தொகுதி முழுவதும் சாலை வசதிகள் மேம்படுத்தி தரவும், தொகுதியில் பல்லாண்டு காலமாக தகுதி வாய்ந்த ஆவணங்கள் சமர்ப்பித்து பட்டா வளங்களுக்காக காத்திருக்கும் பொதுமக்களுக்கு பட்டா வழங்கிடவும், வருவாய் ஈட்டும் வண்ணம் வளர்ச்சி பணிகளை மேற்கொள்ள வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய தொகுப்பினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் வழங்கி புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை முத்துராஜா இது குறித்து விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்தினார்